# Landscaping and Beautification

## By
## Green Rameswaram Trust

### Micro Forests Establishment at Arjuna and Bhima Teertham

On November 5, 2024 District Collector Shri.Simranjeet Singh Kahlon IAS launched the Micro forest initiative of Green Rameswaram supported by National Medicinal Plant Board of Thrissur. Collector planted a couple of saplings symbolising the inauguration of the Micro forests. Several District officials, Rotary club, and Dr.APJ International foundation members attended the programme.




***Collector doing the plantation***



***District Collector visiting Arjuna Teertham***



னகரன் ராமநாதபுரம் / சிவகங்கை

ராமேஸ்வரம் பகுதியில்

# பள்ளி கட்டிட பணிகளை கலெக்டர் ஆய்வு

ராமேஸ்வரம்,நவ.7: பசுமை ராமேஸ்வரம் திட்டத்தின் மூலம் பீமா, அர்ச்சனா தீர்த்தங்களில் மரக்கன்றுகள் நடும் பணிகளை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவங்கி வைத்தார்.

ஆன்மிக ஸ்தலமாகவும், சுற்றுலாத்தலமாகவும் விளங்கி வரும் ராமேஸ்வரத்தை மேம்படுத்த 'பசுமை ராமேஸ்வரம்' திட்டம் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ராமேஸ்வரம் தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ராமேஸ்வரம் நகராட்சி அலுவலகத்தில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உதவி ஆட்சியர் முகமது இர்பான், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் குருதிவேல் மாறன், பாம்பன் ஊராட்சிமன்ற தலைவர் அகிலா பேட்ரிக், தங்கச்சிமடம் ஊராட்சி தலைவர் குயின் மேரி கலந்து கொண்டனர்.

பசுமை ராமேஸ்வரம் திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து கேட்டறிந்த ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், மேற்கொள்ள வேண்டிய பணிகளை மாவட்ட நிர்வாகம், வனத்துறை, காவல்துறை, சுற்றுலாத்துறை, இந்து சமய அறநிலையத் துறை, போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரக வளர்ச்சி துறை மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து திட்டமிட்டு செயல்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். முன்னதாக பசுமை ராமேஸ்வரம் திட்டத்தின் கீழ் பீமா தீர்த்தம் மற்றும் அர்ச்சுனா தீர்த்தத்தில் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவங்கி வைத்தார். அப்துல் கலாம் அறக்கட்டளை நிறுவனர் ஷேக் சலீம், பசுமை ராமேஸ்வரம் செயலாளர் வாசுதேவ், ஒருங்கிணைப்பாளர் சரஸ்வதி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர்.

ராமேஸ்வரம் தீவுப் பகுதியில் பாம்பன் ஊராட்சியில் நடைபெற்று வரும் சிம்மா ஊரணி மற்றும் சிதம்பரம் ஊரணியில் கரை பலப்படுத்தி சுற்றுச்சுவர் கட்டும்பணியை கலெக்டர் ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து தங்கச்சிமடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.4.22 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து உரிய காலத்திற்குள் முடித்திட பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதன் பிறகு ராமேஸ்வரத்தில் பசுமை ராமேஸ்வரம் திட்டத்தின் கீழ் பீமா திட்டம் மற்றும் அர்ச்சுனா திட்டத்தின் மூலம் மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்ததுடன் அதிகளவு மரக்கன்றுகள் நடவு செய்து பராமரித்திட நகராட்சி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார். ராமேஸ்வரம் நகராட்சி அலுவலகத்தில் பசுமை ராமேஸ்வரத்திற்கான திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து பணிகளை தொடர்புடைய அலுவலர்கள் திட்டமிட்டு செயல்பட அறிவுறுத்தினார்.

தங்கச்சிமடத்தில் அரசு மேல்நிலை பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு வருவதை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆய்வு செய்தார்.

***Dinakaran coverage of the event***

Continuing the program, a tree plantation drive was carried out on November 22, 2024 at Arjuna and Bheema Teertham.



Besides this, the Plantation drive was organised at Arjuna Theertham on November 24, 2024, in collaboration with the *Akhila India Yathirai Paniyalar Sangam and Nanbargal Vattam.*




*Plantation drive*

